**அபி வெனுவென் அபி நிதியம் - 2022**

-------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீட்டு திட்டங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2017 வரையான காலப் பகுதியில் நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த எனினும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாத கிரயம் ரூபா 1,076,549 ஆன இயந்திர கை உபகரணங்கள் (Hand Drill, Angle Grinders) 72 அலகுகள் உற்பத்தி உறைகளில் காணப்பட்டதுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 419,600 மற்றும் அதன் வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 49,700 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07(43) இன் பிரகாரம் இந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதி தொடர்பாக மதிப்பீடு இன்றி மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டமையால் சொத்துக்களின் இழிவுப் பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | இயந்திர உபகரணங்களின் பெறுமதி மீள்மதிப்பீடு செய்தல் சபையின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த இயந்திர உபகரணங்கள் தொடர்பாக கண்டறிவதற்காக பாதுகாப்பு அமைச்சினையும் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் சபையொன்றை நியமித்து முறையான மெய்மெய்யாய்வை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதன் பிரகாரம் கணக்குகளில் காண்பிக்க வேண்டிய நியாயமான பெறுமதியை சரியான பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடுகின்றோம். | பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07(43) இன் பிரகாரம் சொத்துக்களின் இழிவுப் பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட ல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தினால் வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2010 முதல் 2020 வரையான ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,071,546 ஆன பித்தளை பிணைப்புக்கள், வீட்டு மின்சார வயர்களை ஈடுபடுத்தும் துணைப்பாகங்களை உள்ளடக்கிய நிர்மாணப் பொருட்கள் களஞ்சியத்தில் இருந்த போதும் அந்த இருப்புக்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த பொருட்களின் கிரயம் கொள்வனவு செய்த ஆண்டில் செலவினமாக கருதி கணக்கீடு செய்யப்பட்ட போதும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமையினால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதியம் ரூபா 1,071,546 வீதம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த நிர்மாணப் பொருட்கள் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு 4 ஆவது பொறியியல் சேவை படைப் பிரிவினால் ஆலோசனை எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், அந்த இருப்புக்கள் 2022/2023 ஆண்டுகளில் முழுமையான வீடமைப்பு திட்டத்தின் நலனாளிகளின் வீடுகளை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்த முடியாதாயின் அருகதையற்றது தொடர்பாக ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருப்பு பெறுமதி கணக்கீடு செய்து நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் உரிய பிரகாரம் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் ஆண்டில் அட்டுறு செலவினமாக இனங்காணப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 266,002 செயற்திட்ட செலவினம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன், அது திரண்ட நிதியத்தில் வரவு வைப்பதற்கு பதிலாக அட்டுறு செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட அட்டுறு செலவினம் ரூபா 266,002 | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட பிரகாரம் நாட்குறிப்புக்கள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு அறிக்கைகளில் சரியான தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை குறைத்தும் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | ரணஜயபுர வீடமைப்பு தொகுதியில் வீடுகளை திருத்தும் நடவடிக்கைகளுக்காக ரூபா 1,230,951 தொகை கடற்படையின் ‘‘அபி வெனுவன் அபி நிதியத்தின் பெயரிலான கணக்கிற்கு’’ விடுவிக்கப்பட்ட போதும் அவ்வாறான திருத்தமொன்று மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மிகுதி செலவினங்களை செய்வதற்காக ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பணம், முற்பணமாக கருதி கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் செலவினமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் திருத்த செலவினங்கள் ரூபா 1,230,951 அதிகரித்தும் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | வீடுகளை பயன்படுத்துகின்ற போது ஏற்படுகின்ற நட்ட இழப்புக்களை மதிப்பீடு செய்து பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் கடற்படைக்கு கையளிப்பதற்கு முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. திருத்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு கடற்படைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருக்குமாயின் உரிய நிதியத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகுதி செலவினங்களை செய்வதற்காக பெறப்படுகின்ற பணம் முற்பணமாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்ததுடன், பழுதுபார்த்தல் செலவினங்களை செய்ததன் பின்னர் உள்ளபடியான செலவினங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | ரணஜயபுரவில் 13 வீடுகளுக்காக 2022 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட ரூபா 1,168,000 தவணைப் பணம் மீளாய்வாண்டில் அறவிடப்படாதிருந்த போதும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தவணைப் பண கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த வீட்டு உரிமையாளர்கள் மூன்று பேர் ஆண்டில் பொது வீட்டை மீளக் | இராணுவ நடைமுறைகளுக்கு முரணாக செயற்பட்டவர்களை சிறைச்சாலையில் இடல் போன்ற காரணங்களால் கைவிடப்பட்டுள்ள வீடுகளை கையேற்று ஏனைய இராணுவ அங்கத்தவர்களுக்கு வழங்க வேண்டியிருந்தமையால் அவர்கள் தொடர்ந்தும் ஆவணங்களில் நிலுவை தவணைப் பணமாக காண்பிப்பதன் மூலம் ரணஜயபுர நிலுவை | உடன்படிக்கை செய்யப்பட்ட பிரகாரம் தவணைப் பணத்தை அறவிட்டு நிலுவை தவணைப் பணத்தை குறைத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| கையளித்திருந்த போதும், அவர்களிடம் இருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 64,000 நிலுவை தவணைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தவணைப் பணம் மிகவும் கணிசமாக அதிகரிக்கின்றமையினால் அவர்கள் பதிவேடுகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அதற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் ரணஜயபுர வீட்டு நலனாளிகளின் பெயர் பதிவேட்டில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வீடுகளை கையளிக்கின்ற அங்கத்தவர்கள் கணிசமான அளவில் நிலுவை தவணைப் பணம் செலுத்துவதற்கு வசதியீனமாக இருந்தமையும் அவர்களுக்கு வழங்குவதற்கு நிர்ணயித்த 2/3 தொகையில் நிலுவை தவணைப் பணத்தை அறவிடுமாறு கணிசமான கோரிக்கைகள் விடப்பட்டதன் காரணமாக அவ்வாறு நிலுவை பணத்தை அறவிடும் முறைமையைத் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.5.3. கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பகுதி மற்றும் முழுமையான வீட்டு நலனாளிகளுக்கு தவணைப் பணம் செலுத்துதல். | 128,128,652 | நலன் பணம் உரிய நலனாளிகள் 339 பேர்களுக்கு கிடைத்தமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | உரிய உறுதிப்படுத்தல் அந்தந்த இராணுவத்தில் இருந்தும் மற்றும் உரிய நலனாளிகளிடம் இருந்தும் பெறப்படுவதுடன், மேலும் பெறவேண்டிய அறிக்கை காணப்படுவதுடன், அந்த அறிக்கை கிடைத்தவுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தப்படுகின்ற பணம் குறித்துரைத்த திகதியில் உரிய நலனாளிகளுக்கு கிடைத்ததை உறுதிப்படுத்துவதற்கான திட்டமொன்று தயாரித்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரணஜயபுர வீட்டு உரிமையாளர்களிடம் இருந்து அறவிட வேண்டிய நிலுவை தவணை பணம் ரூபா 42,968,024 ஆக இருந்ததுடன், இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 12,525,000 ஆகும். | ஓய்வு பெற்ற வீட்டு நலனாளிகளின் ஓய்வூதியம் தயாரிப்பதற்கு காலம் எடுத்தமை, விடுமுறையின்றி கடமைக்களுக்கு அறிக்கையிடாமை, சேவையை விட்டுச் சென்றமை, மரணமடைந்தமை மற்றும் சிறைச்சாலைகளில் இடப்பட்டமை போன்ற காரணங்களினால் சம்பளம் நிறுத்தப்பட்டமையால் நீண்ட கால நிலுவைப் பணம் காணப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது முழுமையான நிலுவைப் பணத்தை ஒரே தடவையில் சம்பளத்தில் இருந்து அறவிட முடியாமையினால் இது தொடர்பாக கண்டறிதல் மற்றும் எதிர்காலத்தில் நிலுவையை மாற்றிக் குறைப்பதற்காக சபையொன்றை நியமிப்பதற்கும் சபையின் பரிந்துரையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளும் எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொலைத் தொடர்பு கோபுர வருமானம் ரூபா 37,098,064 ஆக இருந்ததுடன், உடன்படிக்கையின் படி முன்னைய மாதத்திற்குரிய வாடகைப் பணம் அடுத்து வரும் மாதத்தில் செலுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,624,589 ஆன அறவிட வேண்டிய வாடகை 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாக காணப்பட்டது. | 2022.12.31 வரையில் கிடைக்க வேண்டிய மொத்த கோபுர வருமானத்தில் நிலுவைத் தவணைப் பணம் அறவிட்டதன் பின்னர் மேலுமுள்ள நிலுவைப் பணம் இலங்கை டெலிகொம் (மொபிடல் பரிமாற்ற) கம்பனியில் 03 மாதங்களுக்கான ரூபா 3,624,589 தொகையே அறவிடவேண்டியிருந்தது. இந்த நிலுவை கோபுர வருமானத்தை அறவிடுவதற்காக உரிய தொலைத் தொடர்பு நிறுவனத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதையும் மேலும் அறியத்தருகின்றோம். | உடன்படிக்கையின் பிரகாரம் வாடகை வருமானத்தை அறவிடுவதற்கும் உரிய முதலீட்டிற்காக அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ரணஜயபுர சந்தை தொகுதியில் 2022 திசெம்பர் | நிலுவையாக இருந்த வாடகை வருமானத்தை | உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த |

| | | |
|---|---|---|
| 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த வாடகை வருமானம் ரூபா 297,260 ஆகும். உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை உரிய மாதத்தில் செலுத்த வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 223,760 நிலுவைப் பணம் காணப்பட்டது. | அறவிடுவதற்காக ரணஜயபுர நிர்வாக அலுவலகத்தில் இருந்து உரிய நபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை உரிய மாதத்தில் அறவிடப்படல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 09 ஆம் பிரிவு | நிதியத்தால் பேணிச் செல்லப்படுகின்ற “அபி வெனுவென் அபி நிதியம்” என்ற பெயரில் இலங்கை மத்திய வங்கியில் நிதியமொன்று வைக்க வேண்டியதுடன், சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பணம் அந்த நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதும் நிதியத்தால் இலங்கை மத்திய வங்கியில் கணக்கொன்று பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், இரண்டு அரச வங்கிகளில் 04 கணக்குகள் மற்றும் தனியார் வங்கியில் 02 கணக்குகள் என 06 நடைமுறைக் கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் படி எதிர்காலத்தில் இலங்கை மத்திய வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ) மற்றும் (ஈ) | நிதியத்தின் நிர்வாக அதிகாரியினால் வருடாந்த பாதீட்டு நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க தயாரித்து பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட பாதீடு | 2022 ஆம் ஆண்டின் பாதீட்டிற்காக பொது திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் பாதீட்டிற்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ) மற்றும் (ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இன்றி எந்தவொரு செலவினமும் செய்ய முடியாதிருந்தமை அறிவுறுத்தப்பட்ட போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கிடைத்துள்ளது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்டமையினால் 2022 இற்குரிய பாதீடு 2023 இல் உள்ளடங்கியுள்ளது என தயவுடன் குறிப்பிடுகின்றோம். | எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(இ) மற்றும் வழிகாட்டி 04 | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் நிதியத்தின் செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யக் கூடிய வகையில் நிதியத்தின் பிரதான பணிகள் தொடர்பாக காலாண்டு ரீதியான அறிக்கை தயாரித்து காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் அரச நிதி திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டிற்காக அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் நிதியத்தின் செயல் முன்னேற்ற மீளாய்வு அறிக்கை பாதுகாப்பு அமைச்சின் திட்டமிடல் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(இ) இன் பிரகாரம் காலாண்டு ரீதியான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(இ) மற்றும் வழிகாட்டி 04 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பிரிவு | நிதியத்தால் வருடாந்தம் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை அரச நிதி திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை அரச நிதி திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தால் பேணிச் செல்லப்பட்டுள்ள நிதிய முகாமைத்துவ சேமிப்பு கணக்கில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 3 மில்லியன் முதல் ரூபா 24 மில்லியன் வரையிலான வீச்சில் மீதியொன்று காணப்பட்டதுடன், நிதியத்தை தொழிற்படு மூலதன தேவைகளை இனங்கண்டு மிகைப்பணத்தை அதிக இலாபம் பெறுகின்ற குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொழிற்படு மூலதன தேவைக்காக ஏதாவது நிதியொன்றை நிறுத்தி வைத்தல் எந்தவொரு வியாபார அல்லது அமைப்பின் தேவையாக இருந்ததுடன், அவ்வாறின்றி நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் வசதியீனமாகும். எனினும், ஒட்டுமொத்த ரீதியில் எதிர்வுகூற முடியாதிருந்த வியாபார மற்றும் நிறுவன சூழலில் ஏற்படக் கூடிய நிச்சியமற்ற காரணங்களால் நிதி மிகை/ பற்றாக்குறை ஏற்படக் கூடியதாக இருந்ததை தயவுடன் சுட்டிக் காட்டுகின்றோம். | நிதியத்தின் திட்டமிடப்பட்ட பணிகளுக்காக நிதி தேவையினை எதிர்வுகூறி அதன் பிரகாரம் செலவினங்களுக்காக நிதி தேவைத் திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்தால் பொது மக்கள் நன்கொடைகளை பெறுவதற்காக பேணிச் செல்லப்பட்ட 03 நடைமுறைக் கணக்குகள் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கிடைத்த கூட்டுமொத்தமான ரூபா 901,898 நன்கொடை பண மீதியொன்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. இந்த கணக்கின் மூலம் அக்காலத்தில் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அந்த நன்கொடைப் பணம் ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் இந்த கணக்குகளில் பேணிச் செல்லப்பட வேண்டிய ஆகக் குறைந்த காசு மீதி சேமிக்கும் வகையில் நிதியினை எடுத்து ‘‘அபி வெனுவென் அபி’’ நிதியத்தின் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆக்கபூர்வமான நிதிய முகாமைத்துவத்தை பேணிச் செல்லல் வேண்டும். |

## 1.9 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்திற்குரிய நடைமுறைக் கணக்கு ஒன்றில் 2021 திசெம்பர் முதல் 2022 செப்டம்பர் 15 வரையான காலத்தில் ரூபா 2.8 மில்லியன் மிகைப் பண மீதியொன்று விளைவற்று பேணிச் செல்லப்பட்டிருந்தது. 2022 மே | எதிர்காலத்தில் ஆகக் குறைந்த மீதியை பேணிச் சென்று மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதி தேவையினை எதிர்வுகூறி மிகை நிதியத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மாதத்தில் முதலீட்டு வட்டி விகிதம் உயர்வடைந்த போதும் இந்த மிகைப் பணத்தில் ரூபா 2.5 மில்லியன் மாத்திரம் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்தல் 2022 செப்டம்பர் 15 ஆம் திகதி வரை தாமதித்தமையின் காரணமாக ரூபா 281,527 மதிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டு வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் 398,875,766 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 26,231,498 ஆகும். அதன் பிகாரம் நிதி விளைவுகளில் ரூபா 372,644,268 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் செயற்திட்ட அபிவிருத்தி செலவினம் 96 சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் வட்டி விகிதம் உயர்வடைந்து சென்றதன் அடிப்படையில் வட்டி வருமானம் 228 சதவீதத்தால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்காக பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தில் 2022 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சபை தீர்மானத்தின் படி 25 முழுமையான வீடுகள் மற்றும் 350 பகுதி வீடுகளுக்காக ரூபா 300 மில்லியன் ஆகக்கூடியதன் கீழ் வீட்டு உதவிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதும் அந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாமையின் அடிப்படையில் 2022 மற்றும் 2023 என்ற இரண்டு ஆண்டுகளுக்காக 30 முழுமையான வீடுகள் மற்றும் 400 பகுதியளவான வீடுகளுக்காக நிதி உதவி வழங்குவதற்கு 2022 செப்டம்பர் 27 ஆம் திகதி நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த வீட்டு உதவி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டிய கால அட்டவணை, நிகழ்ச்சித் திட்ட படிமுறைகள் மற்றும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் எதிர்பார்த்த இலக்குகளை காண்பித்து முறையான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தை அங்கீகரித்தல் 2022 ஏப்ரல் 11 வரை தாமதமடைந்திருந்தது. கணக்காய்வினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் படி வீட்டு உதவி நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்த வேண்டிய கால அட்டவணை, நிகழ்ச்சித்திட்ட படிமுறைகள் மற்றும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் எதிர்பார்த்த இலக்கு அல்லது இதற்காக தகைமை பெறுகின்ற தரப்பினர் தெரிவு செய்யும் திட்ட முறைமையொன்றை காண்பித்து முறையான செயல்நடவடிக்கைத் திட்டம் எதிர்வரும் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முறையான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து கால ரீதியில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 300 மில்லியன் ஆகக்கூடியதன் கீழ் வீட்டு உதவிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதும் பாதுகாப்பு அமைச்சு பொது மக்கள் தினத்தின் போது சமர்ப்பித்த கோரிக்கைகளுக்கு இடையே தெரிவு செய்யப்பட்ட 11 நலனாளிகளுக்காக மாத்திரம் பகுதியளவான வீட்டு உதவியாக ரூபா 7,351,078 தொகை மீளாய்வாண்டின் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் 2.3 ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டையும் சேர்த்து 2023 ஆம் ஆண்டில் ஒரு செயற்திட்டத்திற்கு நலன்களை கையளிப்பதற்கு இந்த நிதியம் நிர்வகிக்கப்படுகின்ற முகாமைத்துவ சபையின் மூலம் ஆலோசனை மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | திட்டமிட்டபடி நலன்களை செலுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிதி செயலாற்றல் மட்டத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது 299 பகுதி வீடுகள் மற்றும் 27 முழுமையான வீடுகளுக்காக ரூபா 252 மில்லியன் செலுத்தி முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 36 பகுதி வீடுகள் மற்றும் 18 முழுமையான வீடுகளுக்காக ரூபா 17,264,681 தவணைப் பணம் செலுத்த வேண்டி காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட வீடமைப்பு செயற்திட்டத்தில் அந்த ஆண்டில் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமையின் காரணமாக அந்த ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் நலன்களை செலுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் மட்டத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை விமானப் படை அங்கத்தவர்களுக்காக செலுத்தப்பட் பகுதி வீட்டு தவணைப் பணம் மற்றும் அதற்குரிய நிர்வாக செலவினமாக செலுத்தப்பட்ட ரூபா 32,086,845 தொகை ''மத்திய நலன்புரி மற்றும் புனரமைப்பு நிதியம்'' என்ற பெயரில் பேணிச் செல்லப்படுகின்ற கணக்கொன்றில் செலவு | இலங்கை விமானப் படையின் நலனாளிகளின் பணம் ''மத்திய நலன்புரி மற்றும் புனரமைப்பு நிதியம்'' இற்கு செலவு வைக்குமாறு அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நலன் பணம் மேற்கூறப்பட்ட கணக்கில் செலவு | அரசாங்க நிதியத்திற்காக பொறுப்புக்கூறும் முழுமையான உறுதிப்படுத்தலுடன் கணக்கொன்றுக்கு பணத்தை விடுவிப்பதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது |

| | | |
|---|---|---|
| வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த கணக்கு இலங்கை விமானப் படையின் உத்தியோகபூர்வ கணக்கொன்றாக இருந்தமை உறுதிப்படுத்தப்படாமையினால் அவ்வாறான உத்தியோகபூர்வமற்ற கணக்கில் நிதி ஏற்பாட்டை விடுவித்தல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | வைக்கப்பட்டுள்ளது. இந்த கணக்கு தொடர்பாக விமானப் படையில் விசாரணை செய்து உத்தியோகபூர்வ கணக்கொன்று இல்லையாயின் அது தொடர்பாக முகாமைத்துவ சபை கவனம் செலுத்தி உத்தியோகபூர்வ கணக்கொன்றுக்கு பணத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தயவுடன் அறியத்தருகின்றோம். | . |

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் சிறு உபகரணங்கள் ரூபா 3,556,299 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 1,396,443 ஆக இனங்காணப்பட்டிருந்தது. எனினும் நிதியத்தால் 2018 ஆம் ஆண்டு முதல் வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதியம் வழங்கப்படுகின்றமையால் இந்த சொத்துக்கள் நிதியத்தின் பணிகளுக்காக குறைவாக பயன்படுத்தி இலங்கை இராணுவத்தின் பொறுப்பில் காணப்பட்டதுடன், இராணுவத்தால் சில சொத்துக்கள் நிதியத்தின் பணிகளை அல்லாத வேறு நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டு முதல் வீடுகளை நிர்மாணிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட இராணுவத்தில் காணப்படுகின்ற சொத்துக்கள் முழுமையான வீடமைப்பு செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்துமாறும் பயன்படுத்துவதற்கு முடியாத நிர்மாண பொருட்களை தகுதியற்றதாக ஆக்குதல் சபையொன்றை நியமித்து தகுதியற்றதாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவித்து 4 ஆவது பொறியியல் சேவை படைப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் சொத்துக்கள் நிதியத்தின் பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கொள்வனவுக் கிரயம் ரூபா 4,150,000 ஆன லோடர் பெகோ இயந்திரம் (Skid Steel Loader) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 985,210 ஆக | கடற்படைக்கு கையளிக்கப்பட்ட Skid Steel Loader இயந்திரம், 4 ஆவது பொறியியல் சேவை படை பிரிவிற்கு அந்த இயந்திரத்தின் தேவை இல்லாமையின் காரணமாக | சொத்துக்களின் இருப்பு மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கீடு செய்யப்பட்ட போதும் அந்த சொத்துக்கள் கடந்த 03 வருட காலத்தில் பயன்படுத்திய தரப்பினர் தொடர்பாக வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், நிலையான சொத்துக்கள் மெய்மெய்யாய்வு சபையினால் பௌதீக ரீதியில் உறுதிப்படுத்தப்படாமையினால் அதன் இருப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. மேலும், 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதிய முகாமைத்துவ சபை தீர்மானத்தின் படி இந்த சொத்துக்கள் 4 ஆவது பொறியியல் சேவை படைப் பிரிவில் பொறுப்பில் காணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த தீர்மானம் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கையேற்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட நிர்மாண இயந்திரம் கடற்படையினால் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு இந்த அமைச்சு அங்கீகாரம் கோரியிருந்ததுடன், முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(இ) இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 04 இன் 6(ஆ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சிங்கள மொழியில் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்பிற்கு போதியளவான கால நேரம் காணப்படாமையின் காரணமாக ஏனைய இரண்டு மொழிகளிலும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களை மும்மொழிகளிலும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 877(2)(இ) இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 04 இன் 6(ஆ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை நிதியத்தின் ஆரம்பம் முதல் 2021 ஆம் ஆண்டு வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் கணக்காண்டின் போது நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதிய சட்டத்தின் 11(6) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |